DINAMANI

23 APR 2022

PAGE 4

# புதுவை பல்கலை. பேராசிரியருக்கு விருது

**புதுச்சேரி, ஏப். 22:** புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.தினகரராவ் தேசிய அளவிலான 'புகழ்பெற்ற விஞ்ஞானி' விருது பெற்றார்.



'புகழ்பெற்ற விஞ்ஞானி' விருது பெற்ற பேராசிரியர் அ.தினகரராவை பாராட்டிய புதுவை பல்கலைக்கழகப் துணைவேந்தர் குர்மீத் சிங்.

தாவரத்தின் சமீபத்திய போக்குகள், சவால்கள் என்ற தலைப்பில், விருதுநகர் வி.எச்.என். செந்தில்குமார் நாடார் தன்னாட்சிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், புதுவைப் பல்கலைக்கழகத்தின் உயிர் தகவலியல் துறைப் பேராசிரியர் அ.தினகரராவுக்கு, தாவர அறிவியலில், அவரது சிறந்த பங்களிப்பிற்காக, தாவர ஆராய்ச்சிக்கான சங்கத்தின் 'புகழ்பெற்ற விஞ்ஞானி' விருது வழங்கப்பட்டது.

இவர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக, தாவர மூலக்கூறு உயிரியல், உயிர் தகவலியல் துறையில் பணிபுரிந்து வருகிறார். 80-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பாய்வு செய்து, தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியிட்டுள்ளார். புதுவைப் பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆசிரியர் விருதுடன், பல தேசிய, சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளார்.

'புகழ்பெற்ற விஞ்ஞானி' விருது பெற்ற பேராசிரியர் அ.தினகரராவை புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஊழியர்கள் பாராட்டினர்.